# பள்ளிக் கல்வித்துறை

## மானியக் கோரிக்கை எண் - 43

## அறிவிப்புகள்
## 2021-2022

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

## 1. திசைதோறும் திராவிடம்

திராவிட மொழிகளிலேயே தொன்மை மிக்க மொழியான தமிழின் வரலாறு, பண்பாட்டு மரபு மற்றும் தமிழ்ச் சமூகத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் சிறந்த தமிழ்நூல்கள் (மாபெரும் தமிழ்க் கனவு ஆங்கிலத்திலும், பொன்னியின் செல்வன், வைக்கம் போராட்டம் ஆகிய நூல்கள் மலையாளத்திலும், திருக்குறளுக்கான கலைஞர் உரை தெலுங்கிலும், தி. ஜானகிராமனின் சிறுகதைகள் கன்னடத்திலும்) மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கிலம் மற்றும் சம்மந்தப்பட்ட மாநில மொழிப் பதிப்பகங்களோடு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டுவரப்படும். இதேபோல், பிற திராவிட மொழிகளிலிருந்து சிறந்த நூல்கள் தமிழுக்கு மொழிபெயர்க்கப்படும்.

## 2. முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய இலக்கியம், இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், பொறியியல், வேதியியல், வேளாண்மை போன்ற துறைகளில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள தலைசிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து சம்மந்தப்பட்ட பதிப்பகங்களோடு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் கூட்டு வெளியீடாக ரூ.2 கோடி செலவில் வெளியிடப்படும். இது முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் எனும் மாபெரும் திட்டத்தின் தொடக்கமாக அமையும்.



## 3. இளந்தளிர் இலக்கியத் திட்டம்

குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தவும் (பேச்சாற்றல், எழுத்தாற்றல், ஓவியம் தீட்டும் ஆற்றல்) நன்னெறிக் கல்வியைக் கற்பிக்கவும் மற்றும் அறம்சார் சமூக விழுமியங்களை வளர்த்தெடுக்கவும் இளந்தளிர் இலக்கியத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், முதல்கட்டமாக 100 குழந்தை இலக்கிய நூல்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வெளியிடப்படும்.

## 4. குழந்தை எழுத்தாளர்களுக்கு "கவிமணி விருது"

குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் வண்ணம், 18 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களில் ஆண்டுதோறும் மூன்று சிறந்த எழுத்தாளர்களைத் தேர்வு செய்து ரூ.25,000 ரொக்கம், கேடயம் மற்றும் சான்றிதழுடன் "கவிமணி விருது" வழங்கப்படும்.



## 5. செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்

தமிழ் மொழிக்கு அளப்பரிய பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும், அத்தகைய அறிஞர் பெருமக்களை இளம் தலைமுறையினர் முன்மாதிரியாகக் கொள்ளும் வகையிலும், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கப்படும்.

இந்த அரங்கத்தில் சாகித்ய அகாதமி விருது, ஞானபீட விருது போன்ற உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும்.

இளம் தலைமுறையினரின் எழுத்தார்வத்தைத் தூண்டும் வகையில் மேற்கூறிய படைப்பாளிகளின் படைப்புகள் சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும்.

## 6. உயர்கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டும் ஆலோசனை மையம்

அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கென தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாகக் கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும்.

முன்னாள் மாணவர்களைக் கொண்டு அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறையும் அறிமுகப்படுத்தப்படும்.



## 7. பள்ளிகளில் பாரம்பரியக் கலைகள்

கரகாட்டம், கும்மி, சிலம்பாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், பன்னிசை, நாட்டுப்புறப் பாட்டு போன்ற தமிழரின் பாரம்பரியக் கலைவடிவங்களை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் எடுத்துச் செல்வதை இலக்காகக் கொண்டு கிராமப்புறங்களில் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் உதவியுடன் பயிற்சியளிக்கப்படும். இதுபோலவே சிலம்பம், மல்யுத்தம் முதலான தமிழரின் பாரம்பரிய தற்காப்புக் கலைகளையும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முறையாகக் கொண்டு சேர்க்க உரிய பயிற்சி அளிக்கப்படும்.

## 8. விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

மாணவர்களின் உடல்நலம் மற்றும் மனநலத்தைப் பேணும் வகையில் அனைத்துப் பள்ளிகளுக்கும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படும். பள்ளி ஒன்றுக்கு ரூ.5000 வீதம் 24,266 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும், ரூ.10,000 வீதம் 6,948 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கும், ரூ.25,000 வீதம் 6,177 அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் 35 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.



## 9. பொது நூலகங்களுக்குப் புத்தகங்கள் கொள்முதல்

பொது நூலகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தேவையான புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்குத் தேவையான மிகச் சிறந்த புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், தற்போதுள்ள புத்தகங்களுக்கான கொள்முதல் கொள்கையில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். புத்தகக் கொள்முதலின் ஒவ்வொரு படிநிலையிலும் ஒளிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படும்.

## 10. அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு நூல்கள் வாங்குதல்

அண்ணா நூற்றாண்டு நூலகம் 5 இலட்சம் நூல்களுடன் 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதிப்பிக்கப்பட்ட சிறந்த நூல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலகத்தை தினந்தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அனைத்துத் துறைகளிலும் வெளிவந்துள்ள தலைசிறந்த புத்தகங்கள் கொள்முதல் செய்து வழங்கப்படும். மின்–புத்தகங்கள், மின்–பருவ இதழ்கள், மின்–ஆராய்ச்சி இதழ்களை வாசகர்கள் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இணையவழி குறிப்புதவிப் பிரிவும் ரூ.6.5 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.



## 11. முனைவர் எஸ். ஆர். அரங்கநாதன் நினைவு நூலகம்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் உருவாக முக்கியப் பங்காற்றிய இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படும் பத்மஸ்ரீ முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களை நினைவு கூரும் வகையில் அவர் பிறந்த ஊரான மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் மாதிரி நூலகம் அமைக்கப்படும்.

இந்நூலகத்தில் முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களின் படைப்புகளுடன், அரிய புத்தகங்கள், ஆராய்ச்சி வசதி, குழந்தைகள் பிரிவு, இணைய வசதியுடன் கூடிய மின் நூலகம் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

## 12. செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் பெயரில் புதிய நூலகக் கட்டடம் கட்டுதல்

செந்நாப் புலவர் ஆ.கார்மேகனார் அவர்கள், அறிவு நூல் திரட்டு, கண்ணகி தேவி, காப்பியக் கதைகள், மூவர் உலா ஆராய்ச்சி, தமிழ்மொழியின் மறுமலர்ச்சி, நல்லிசைப் புலவர்கள் போன்ற பல நூல்கள் இயற்றியுள்ளார்.

தமிழுக்கு அவர் ஆற்றிய சேவையினைப் போற்றும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம் அபிராமத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலகம் கட்டப்படும்.



## 13. கிராமப்புற நூலகங்களில் மின் நூலக சேவை

தமிழ்நாடு அரசு பொது நூலக இயக்ககத்தின் கீழ் 1,926 கிளை நூலகங்கள் மற்றும் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சர்வதேச நாளிதழ்கள், பருவ இதழ்கள் கிராமப்புறங்களில் உள்ள வாசகர்களுக்கும் கிடைக்கும் வண்ணம் அனைத்து நூலகங்களிலும் மின் நூலகம் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.2.40 கோடியில் ஏற்படுத்தப்படும்.

## 14. கன்னிமாரா பொது நூலகத்தை நவீனமயமாக்கல்

1896ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கன்னிமாரா பொது நூலகம் இந்தியாவில் உள்ள பழமையான நூலகங்களுள் ஒன்றாகும். இந்தியாவின் தேசிய வைப்பு நூலகமாகச் செயல்படும் இந்நூலகம் நாடு முழுவதும் வெளியாகும் அனைத்து நாளிதழ், பருவ இதழ்களில் ஒரு பிரதியை இலவசமாகப் பெற்று வருகிறது. இந்நூலகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அதன் பாரம்பரிய நிலை மாறாத வகையில் ரூ.3.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.



## 15. ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கொள்கை

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் நலனுக்காக, ஆண்டுதோறும் பொதுமாறுதல் நடத்தப்பட்டு வருகிறது. இப்பொதுமாறுதலை ஒளிவுமறைவின்றி 2021–22ஆம் கல்வியாண்டு முதல் நடத்திட பொது மாறுதல் கலந்தாய்வுக் கொள்கை வகுக்கப்பட்டு வெளிப்படையாக நடைமுறைப்படுத்தப்படும்.

## 16. பள்ளிப் பதிவேடுகள் கணினிமயமாக்கல்

தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நிருவாகப் பணிப்பளுவைக் குறைக்கும் வண்ணம் பள்ளிகளில் பராமரிக்கப்படும் தேவையற்ற பதிவேடுகள் நீக்கப்படும். அவசியமான பதிவேடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, கல்வித் தகவல் மேலாண்மை முறைமை (EMIS) வாயிலாகப் பெறத்தக்க வகையில் மாற்றியமைக்கப்படும்.



## 17. பள்ளிகளுக்கான அங்கீகாரம் இணைய வழியில் வழங்குதல்

அனைத்து அரசு நிதிஉதவி / பகுதி நிதிஉதவி / சுயநிதிப் பள்ளிகளில் தொடக்க/ ஆரம்ப / தொடர் அங்கீகாரம், பிற வாரியப் பள்ளிகள் (சி.பி.எஸ்.இ, சி.ஐ.எஸ். சி.இ, சி.ஏ.ஐ.இ, ஐ.பி மற்றும் பிற) சார்பான தடையின்மைச் சான்று, அங்கீகாரம் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வகையான சேவைகளை எளிமையாக்கி, இணைய வழியே ஒளிவு மறைவின்றிப் பெறத்தக்க வகையில் மென்பொருள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

## 18. மின்னணு சேவைகள் (e-Services)

பள்ளிக் கல்வித் துறையில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றுகளான நன்னடத்தைச் சான்று, ஆளறிசான்று, தமிழ் வழியில் படித்ததற்கான சான்று உள்ளிட்ட அனைத்துச் சான்றுகளும் அவர்தம் இல்லத்திற்கு அருகிலுள்ள அரசு பொது சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து காலவிரயமின்றிப் பெற்றுக்கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்படும்.



## 19. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்விப் பாடத்திட்டத்தைச் சீரமைத்தல்

தொழிற்கல்வி பயிலும் மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்கல்விப் பாடங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உறுதுணையோடு மேம்படுத்தப்படும். இதனால் மாணவர்கள் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்ப திறனைப்பெற்று உடனடி வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

## 20. கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் வசித்து வரும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த 10 முதல் 14 வயதிற்குட்பட்ட மாணவியருக்குத் தரமான கல்வி வழங்கும் பொருட்டு 61 கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப்பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தவும், இடைநிற்றலைத் தடுக்கவும், கல்வியைத் தொடரவும், 5 உண்டு உறைவிடப்பள்ளிகள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.



## 21. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வீட்டிலேயே கல்வி மற்றும் இயன்முறை மருத்துவம்

பிறப்பு முதல் 18 வயதிற்குட்பட்ட 7,786 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பள்ளி வயதை அடைந்த பிறகும், உயர் ஆதரவு தேவைப்படும் (பலதரப்பட்ட குறைபாடுகள், அறிவுசார் குறைபாடு, பெருமூளை முடக்கு வாதம், மன இறுக்கம் மற்றும் பல) காரணத்தால் பள்ளிக்கு வர இயலாத நிலையில் உள்ளனர். அம்மாணவர்களுக்கு கல்வி, இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட சிகிச்சைகளை வீடுகளுக்கே சென்று வழங்கி அவர்தம் கற்றல் சூழலை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு ஒரு கல்வித்திட்டம் தொடங்கப்படும்.

ஒரு மாணவருக்கு ரூ.10,000 வீதம் 7,786 மாணவ/மாணவியர்க்கு ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 22. மாநில வளமையம் ஏற்படுத்துதல்

மாநில அளவிலான பயிற்சிகளின்போது கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகளில் ஆசிரியர்களுக்கு ஆய்வக வழி அனுபவக் கற்றலை (hands on and experiential learning) வழங்குவது மிகவும் அவசியமாகிறது. இதற்கென ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் "மாநில வளமையம்" உருவாக்கப்படும். இம்மையத்தை ஆண்டு முழுவதும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடவும் வழிவகை செய்யப்படும்.



## 23. கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் பயிலும் மாணவர்களுக்கு மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் பயிற்சிகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் மனநலன் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்கென ரூ.1 கோடி மதிப்பீட்டில் கலை மற்றும் விளையாட்டு அடிப்படையிலான ஆசிரியர் கட்டகம் மற்றும் மாணவர் கையேடு உருவாக்கப்படும்.

## 24. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மதிப்பீட்டுப் புலத்தை உருவாக்குதல்

ஒவ்வொரு மாணவரின் கற்றல் அடைவுகளை, தகுந்த கால இடைவெளியில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Labs) வாயிலாக அளவிடவும், தரவுகளின் அடிப்படையில் பதிவு செய்யவும், கற்றல் கற்பித்தல் தரத்தை உறுதி செய்யவும், அதனடிப்படையில் உகந்த குறைதீர் உத்திகளை உருவாக்கி கற்றல் கற்பித்தலின் தரத்தை மேம்படுத்தவும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மதிப்பீட்டுப்புலம் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.



## 25. உயர் தொழில்நுட்பப் படப்பதிவுக் கூடங்கள்

பள்ளிக் கல்வித் துறையில் மாணவர்களின் நலனுக்காக கல்விசார் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய கல்வித் தொலைக்காட்சி அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது. தரமான காணொலிகளை ஒளிபரப்புவதற்கென மெய்நிகர் ஒளிப்பதிவுக் கூடம் உள்ளிட்ட ஐந்து ஒளிப்பதிவுக் கூடங்கள் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் உருவாக்கப்படும்.

இப்புதிய படப்பதிவுக் கூடங்களின் வாயிலாக, சிறந்த வல்லுநர்களைக் கொண்டு மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி வழங்கப்படுவதையும் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படுவதையும் உறுதி செய்ய இயலும். மேலும், இந்தக் கல்வியாண்டில் கூடுதலாக இரண்டு கல்வித் தொலைக்காட்சி அலைவரிசைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 26. சிறந்த கற்போர் மையங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்குதல்

கற்போம் எழுதுவோம் இயக்கத்தின் கீழ், திட்டச் செயல்பாடுகளைச் சிறப்பாகவும், புதுமையாகவும் செயல்படுத்தும் கற்போர் மையங்களை ஊக்கப்படுத்தும் விதமாக, ஒரு மாவட்டத்திற்கு தலா 3 மையங்கள் வீதம் 38 மாவட்டங்களில் 114 மையங்களைத் தெரிவு செய்து, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயம் ரூ.5.70 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.



## 27. வயது வந்தோர் கல்விக்காக மாநில எழுத்தறிவு மையம் உருவாக்குதல்

வயது வந்தோருக்கான கல்வித் திட்டங்களில் புதுமைச் செயல்பாடுகளைக் கொண்டுவரும் வகையில், கலைத் திட்ட உருவாக்கப் பிரிவு, செயலாராய்ச்சிப் பிரிவு, பயிற்சிப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய மாநில எழுத்தறிவு மையம், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் கீழ் ரூ.26.96 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 28. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு விருது

கிராமப்புறங்களைச் சேர்ந்த லட்சக் கணக்கான ஏழை எளிய மாணவர்களுக்கு அரசுப் பள்ளிகள் சிறந்த கல்விச் சேவையை ஆற்றி வருகின்றன. இப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு, கல்வித்தரம், பெற்றோருக்கான விழிப்புணர்வு என ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கென சிறந்த முறையில் அர்ப்பணிப்போடு பணியாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு விருது ஆண்டுதோறும் வழங்கப்படும்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்